# திராவிட சினிமா

34

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.

படங்கள் உதவி -:- ஞானம்







## ‘நாடோடி மன்னன்’ எழுப்பிய கோஷங்கள்!

திராவிட சினிமாக்களின் மாதிரியில் எம்.ஜி.ஆர் திரைப்படங்கள் ஒரு புதிய வகைமை எனக் கருதக் காரணமுள்ளது. அதிலும் குறிப்பாக ‘நாடோடி மன்னன்‘ பலவகையிலும் கவனத்தைக் கோருவது. 1958 ஆம் ஆண்டில் வெளிவந்து மாபெரும் வெற்றி பெற்ற திரைப்படம். ‘எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ்’ சார்பாக அவரது அண்ணன் எம்.ஜி.சக்கரபாணியுடன் இணைந்து தயாரித்து, எம்.ஜி.ஆரே இயக்கிய திரைப்படம் ‘நாடோடி மன்னன்’.

1954 இல் இருந்தே திராவிட முன்னேற்றக் கழக மேடைகளில் காணப்பட்டார் எம்.ஜி.ஆர். என்ற போதும் அவர் பிறரைப் போல முழுநேரச் செயல்பாட்டாளராக இருக்கவில்லை. 1952க்குப் பிறகு பரபரப்பான நடிகராகிவிட்ட நிலையில் அவரது நேர ஒதுக்கீடு அது தொடர்பிலானதாகவே இருந்தது. ஆனாலும் மாநாடுகள் போன்றவற்றில் பங்கேற்பதைத் தவிர்த்ததில்லை. 1957 ஆம் ஆண்டுத் தேர்தலில் பல பிரபலங்கள் தேர்தல் களம் கண்ட போதும் எம்.ஜி.ஆர் அந்தப் பட்டியலில் இல்லை. ஆனால் தேர்தல் பரப்புரைகளில் பங்கேற்றார் எனத் தெரிகிறது.

1958 ஆம் ஆண்டு வெளிவந்த ‘நாடோடி மன்னன்’ படத்தில் ‘எம்.ஜி.ஆர் பிக்சர்ஸ்’ சின்னமாக கருப்பு சிவப்பு தி.மு.க கொடி பட்டொளி வீசிப் பறந்தது. 1957 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் அண்ணா தலைமையில் தி.மு.க தலைவர்கள் 15 பேர் வென்று தமிழ்நாட்டு அரசியல் களத்தில் அசைக்கவியலாத சக்தியாக காலூன்றிய போது, எம்.ஜி.ஆரும் தனது இருப்பை உறுதியாக்கிக் கொண்டார்.

### மேலோட்டமான வெளிநாட்டறிஞர் ஆய்வுகள்

இது வழக்கமான திராவிட சினிமா பாணியில் உருவான படம்தான். வெகுகாலமாக தமிழில் உருவான ராஜா ராணி திரைப்படங்களில் சொல்லப்பட்ட ‘மன்னராட்சி ஒழிந்து மக்களாட்சி‘ உருவாகும் கதைக்களம்தான். இன்னும் சொல்லப் போனால் படத்தின் ஆரம்பக் காட்சியிலேயே மக்கள் ‘மன்னராட்சி ஒழிக மக்களாட்சி மலர்க’, ‘வேலை கொடு’, ‘சோறு கொடு’ எனும் கோரிக்கை அட்டைகளை ஏந்தி ‘நாடோடி’ தலைமையில் ஊர்வலம் வந்து கைதாகிறார்கள். நாடோடி சிறையிலடைக்கப்படுகிறான். வேடிக்கை, அவர் தலைமையேற்று நடத்தும் மக்களும் அமைப்பும் பின்னர் திரைப்படத்தில் காணப்படுவதில்லை.

பார்ப்பனத் துணையுடன் தமிழ்த் திரைப்படங்களை ஆராய்ச்சி செய்த வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஆய்வாளர்களில் பலர், கவனமாக எம்.ஜி.ஆர். திரைப்படங்களை மட்டும் தேர்வு செய்து, அந்தப் படங்களை, திராவிட சினிமா எனும் கருத்தியல் தொடர்ச்சியுள்ள திரைப்படங்களிலிருந்து தனித்த ஒன்றாகவே பார்த்தனர். அந்த ஆய்வின் நோக்கம் திராவிடச் சிந்தனைகள் திரைப்படங்கள் வழியாக மக்களிடம் சென்றடைந்த பன்மைத்துவமான போக்குகளுக்கு அவற்றின் உரிய பங்கைத் தர மறுப்பது. மறுபுறம் எம்.ஜி.ஆர். எனும் நடிகரை தனித்துவமான தி.மு.க கொள்கைப் பரப்புரை மூலவிக்கிரகம் ஆக்குவது.

இதன் முக்கியமான ஆபத்து என்னவெனில் எம்.ஜி.ஆர் எனும் நடிகர் மிக கவனமாக முழங்கிய ஆழமற்ற வெற்று கோஷங்களையே தி.மு.க.வின் கொள்கைத் தளமாகக் காட்டி, அது எத்தனை மேலோட்டமானது என்று தீர்ப்பெழுதுவது. ஜேம்ஸ் நார்ட்டன் என்ற *GLOBAL STUDIES, INDIA AND SOUTH ASIA* நூலின் ஆசிரியர், ‘இந்தப் படம் எப்படி அடுக்குமொழியும், சண்டைக் காட்சிகளும் இணைந்து ஒரு ஒடுக்கப்பட்ட மக்களின் கதாநாயகனை உருவாக்குகிறது என்பதற்குச் சரியான உதாரணம்‘ என்கிறார். இந்தத் திரைப்படத்திலேயே தி.மு.க.வின் கொள்கைப் பிரகடனங்கள், செயல்திட்டங்கள் அனைத்தும் ஒரே காட்சியிலேயே பேசப்பட்டுவிடுகின்றன. அதற்குப் பின் எம்.ஜி.ஆர் எனும் நடிகரின் சாகசம் மட்டும்தான்.

**ஆய்வாளர்களில் பலர் எம்.ஜி.ஆர் திரைப்படங்களை மட்டும் தேர்வு செய்து, அந்தப் படங்களை, திராவிட சினிமா எனும் கருத்தியல் தொடர்ச்சியுள்ள திரைப்படங்களிலிருந்து தனித்த ஒன்றாகவே பார்த்தனர்.**

### நீண்ட படப்பிடிப்பு

‘நாடோடி மன்னன்’ திரைப்படமும், வாரிசற்ற அரசொன்றுக்குப் புதிய அரசனொருவன் தேர்வாவதும், அவனை அரியணை ஏறவிடாமல் தடுக்கும் ராஜகுரு, தளபதி ஆகியோர் சதியில், சந்தர்ப்பமாக வேறு வழியின்றி மன்னனைப் போன்ற உருவ ஒற்றுமை கொண்ட நாடோடி, மன்னனாவதும்தான் கதைக்களத்தின் பிரதான முடிச்சு.

எம்.ஜி.ஆர் திரைத்துறையில் நடிப்பு தவிர்த்த பல துறைகளில் நல்ல திறன் கொண்டவராக இருந்தார் என்பது பலரும் பதிவு செய்த தரவு. இந்தத் திரைப்படத்தையும் அவர் *PRISIONER OF ZENDA (1937) IF I WERE A KING (1938)* ஆகிய ஆங்கிலப் படங்களின் கதைக்களங்களிலிருந்து கண்டடைந்ததாகத் தெரிவித்திருக்கிறார். தான் தயாரித்து இயக்கும் படத்தில் இரட்டை வேடம் ஏற்பது என்பது ஒரு நடிகருக்கு மிக முக்கியமான தேர்வுதான்.

இந்தப் பல்வேறு கூறுகளே அந்தத் திரைப்படத் தயாரிப்பை இரண்டு ஆண்டுகளில், 200க்கும் மேலான நாட்கள் படப்பிடிப்பு நடத்தி முடிக்கும்படியானது என்கிறது தகவல். அதிலும் முதல் பாதி கறுப்பு வெள்ளையிலும், பின்னால் வரும் கன்னித்தீவுக் களம் கேவா கலரிலும் உருவாக்கப்பட்டது. இதன் பக்க விளைவாக நடிகை பானுமதி விலகல், சரோஜாதேவி அறிமுகம் ஆகியவை அரங்கேறின. வாள் சண்டைக் காட்சிகளே அநேகமாக ஒருமணி நேரப் படம்.

### அண்ணா கொடுத்த வாள்

நீளமான திரைக்கதை அமைப்பில் ஏற்படும் தொய்வை, ஓரளவு நேர் செய்வது எஸ்.எம். சுப்பையா நாயுடுவின் இசையிலான அற்புதமான பாடல்கள் என்றால் பிழையில்லை. அசலான திராவிட சினிமா செய்தி, படத்தின் தொடக்கத்திலேயே அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவிடுகிறது. நாடோடி அரியணை ஏறி, மக்களுக்கு நலத்திட்டங்கள், ஏழை எளியவர்க்கு வரிச்சலுகை, விவசாயத்துக்குக் கடனுதவி, கலப்புத் திருமண ஊக்குவிப்பு, அவர்களின் வாரிசுகளுக்கு அரசில் வேலை வாய்ப்பு எனப் பெரும்பான்மையான தி.மு.க திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்திவிடுகிறான்.

அதற்குப் பின்னரான திரைக்கதை முற்றிலுமாக எம்.ஜி.ஆர். எனும் நடிகருக்கானது. நாடோடி அரசனானாலும் மன்னனின் மனைவியிடம் பண்பாடு காத்து விலகி நிற்கிறான். ஒரு நிலையில் அவளிடம் உண்மையைச் சொல்லிவிட அவள் ‘அண்ணா’ என விளிக்கிறாள். நாடோடி, ‘என்னை நம்புகிறாயா?’ எனக் கேட்க அவள், ‘நான் என்ன... இந்த நாடே உங்களைத்தான் நம்பி இருக்கிறது‘ என்கிறாள். அதே போல கன்னித் தீவில் காதலிக்கும் இளம் பெண்ணிடமும், ‘எங்கள் பண்பாடு திருமணமாகாத ஆணும் பெண்ணும் அருகில் படுக்கக்கூடாது’ எனப் பண்பாட்டு விளக்கம் நடக்கிறது.

ஏற்கெனவே உள்ள செய்திகளின்படி ‘நாடோடி மன்னன்’ வெற்றிக்காக அண்ணா அவர்கள் தலைமையில் வழங்கப்பட்ட ‘தங்க வாளை’ பின்னாளில் அவர் கொல்லூர் மூகாம்பிகை கோயிலுக்குக் காணிக்கையாகக் கொடுத்தார் எனத் தெரிகிறது. இது போதும், அவரது கொள்கைப் பிடிப்புப் பற்றி அறிய.! ஆம், ‘நாடோடி மன்னன்’ எம்.ஜி.ஆர்., தனக்காகத் திட்டமிட்டு உருவாக்கிய திராவிட சினிமாதான். இந்த மாதிரியை அவர் தொடர்ந்து வளர்த்தெடுத்த விதம் ஆர்வமூட்டுவது. அதை இனி வரும் படங்களில் பார்க்கலாம்.

...படம் விரியும்

---

## இந்திய மனங்களை வென்றவர்கள்

உத்தரகண்ட் மாநிலத்தில் சில்க்யாராவில் சுரங்க விபத்து ஏற்பட்டதும் வந்து நின்றவர் சுரங்கப் பணி நிபுணர் அர்னால்டு டிக்ஸ். ஆஸ்திரேலியரான இவர், சர்வதேச சுரங்கப் பணி கூட்டமைப்பின் தலைவராக இருக்கிறார். மீட்புப் பணிகள் நடைபெற்றபோது 24 மணி நேரமும் அங்கேயே மக்களுடன் இருந்தார். சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு நம்பிக்கை அளித்ததுடன், ஊடகங்களுக்கும் அவர்தான் பதிலளித்தார். குறிப்பாக ஒரு தேசத்துக்கே நம்பிக்கை அளித்தார்.

அந்த மீட்புப் பணியின் இறுதிக் கட்டத்தில் பங்காற்றிய எலிவளைத் தொழிலாளர்கள் ஒரே நாளில் சாதனை நாயகர்களாகினர். எலி வளை சுரங்கப் பணி தடை செய்யப்பட்டிருந்தாலும், நெருக்கடியான நேரத்தில் இந்த முறையே கை கொடுத்துள்ளது. இந்தப் பணியில் ஈடுபட்டவர்களில் பெரும்பான்மையினர் இஸ்லாமியத் தொழிலாளர்கள்.

”உத்தரகண்ட் மாநிலத்தில் இருந்து இஸ்லாமியர்களை வெளியேற்ற வேண்டும் என வெறுப்புப் பேச்சை உமிழ்ந்தவர் அந்த மாநில பா.ஜ.க, முதல்வர் புஷ்கர் சிங் தமி. இப்போது களத்துக்கு வந்தது யார்?” என கேள்வி எழுப்பி இருக்கிறார் சி.பி.ஐ கட்சியைச் சேர்ந்த சுபாஷினி அலி.

இந்து-முஸ்லீம் தொழிலாளர்கள் இணைந்துதான் இதனை வெற்றிகரமாக முடித்தனர் என்றும் கூறியுள்ளார். இதுதான் இந்தியா! இந்த ஒற்றுமையை வலிமைப்படுத்துவோம் எனக் கொண்டாடுகின்றனர் மக்கள்.

---

## :ப்ளாஷ்பேக்



### தேர்தலுக்கு மாநாட்டு நிதி!

தி.மு.கழகத்தில் 12 வயது இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றது முதல் இன்று வரை உழைத்து வருகிறேன். மின் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தில் நான் மாநில அளவிலான பொறுப்பை அடைந்த போது, என் சகோதரர் ரத்தினசபாபதியுடன் இணைந்து, சங்கத்தின் நிதி மற்றும் உறுப்பினர்களை அதிகமாக்கி மாநில மாநாடு நடத்திடத் திட்டமிட்டோம். 2009 மக்களவைத் தேர்தல் காலம் என்பதால் மாநாட்டை ஒத்திவைத்து மாநாட்டுக்காக சேர்க்கப்பட்ட நிதியைத் தேர்தல் நிதியாக அப்போதைய பேரவைத் தலைவர் அண்ணன் செ.குப்புசாமி தலைமையில் பொறுப்பாளர்கள் பலரும் இணைந்து தலைவர் கலைஞரிடம் அளித்தபோது எடுத்துக்கொண்ட படம் இது.



கோவிந்தன்

**-வ.கோவிந்தன், மாநில முன்னாள் பொருளாளர், தமிழ்நாடு மின்கழக தொ.மு.ச., சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## கருவூலம்


### மதிநுட்பமும் பிரச்சாரமும்

**1978 ஆம் ஆண்டு, ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வும், எதிர்க்கட்சியாக தி.மு.க.வும் எப்படிச் செயல்பட்டன என பத்திரிகைகள் அலசின. ‘இந்தியா டுடே’, ‘சண்டே’ போன்ற ஆங்கில ஏடுகள் கலைஞரின் ஆளுமையை உயர்த்திப் பிடித்தன. “நடிகர் திறமையாக நாடாள முடியும் என்பதை நிரூபிக்க முடியவில்லை. ஆனால் தி.மு.க தலைவரான கலைஞர் சட்டமன்றத்தில் மதிநுட்பமான தாக்குதல்களாலும், பொதுமக்களிடம் உள்ள நேர்த்தியான உறவு, பிரச்சாரம் ஆகியவற்றாலும் வெற்றிகரமான தலைவராக வெற்றி பெற்று இருக்கிறார்” என ‘சண்டே’ ஏடு புகழ்ந்தது.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம்

316




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131